தரும் பயிர்களைச் செய்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானுல், அரசாங்கம் தலையிட்டு, அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா? அதைத் தடுக்காமல் இருந்தால் உணவுப் பிரசினை மோசமாகும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அரசாங்கம் தலையிட்டு, தடுக்கப்பட வேண்டிய அளவுக்கு நிலைமை சீர்கேடு அடையவில்லை.

மேற்கத்திய பாணியில் விடுதி

* 290 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா —

(அ) வெளி நாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவாறு எல்லா நவீன வசதிகளைக்கொண்ட மேற்கத்திய பாணியில் ஓட்டலைக் கட்டுவதற்காக கல்கத்தா மெசர்ஸ் ஓபிராய் ஓட்டல் லிமிடெட் நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு நிலம் கொடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எத்தனை வருடங்களுக்கு, குத்தகை தொகை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குத்தகைக்காரரிடம் நிலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து இதன் குத்தகைக்காலம் 50 ஆண்டுகள் ஆகும். குத்தகைக்காரர் விரும்பினுல் குத்தகைக்காலம் மேலும் 49 ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகை 1,00,350 ரூபாய் ஆகும். இதனை தொகை செலுத்த வேண்டிய ஆண்டில் முந்திய திங்கள் 10-ம் தேதியன்றே அதற்கு முன்போ செலுத்த வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்போதுள்ள நிலைமை என்ன விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குத்தகை விடப்பட்டாகி விட்டது. பணமும் கட்டியாகிவிட்டது.

முதலாண்டு மருத்துவ மாணவர்கள்

291. வினு.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குறிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதலாண்டு மருத்துவ மாணவர்கள் இறுதித் தேர்தலில் தோல்வியுற்ருல் கல்லூரியிலேயே சேர்ந்து படிக்க வாய்ப்பைக் கொடுக்கும் உத்தேசம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு

* 292 வினு.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. எம். வில்லியம் : } மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டுஏப்ரல் மாதத்தில் வைத்திய பிற்கால மேல் பட்ட படிப்பு நிலையம் (Postgraduate Medical Education and Research Centre) சென்னையில் மத்திய அரசாங்க உதவியுடன் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை அடையாற்றில் மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு—ஆராய்ச்சி நிலையம் ஒன்றை மத்திய அரசு உதவியுடன் நிறுவுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.